Registered as a News Paper in Ceylon
P. M. G- No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ...
(1889)
ஆவணி 28...
ஆரம்பமான ...

வெள்ளி தோறும் வெளி வருவது
தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சுஅ] யாழ்ப்பாணம்:- துன்முகி வூ வைகாசி மீ ருஉ வெள்ளிக்கிழமை (18 MAY. 1956) [இல - சு...]

முத்தமிழ் முதிர்சோலை

# பாராண்ட பண்டைத் தமிழர் பல்கலைப் பண்பாடு

## வானநூல் வகுத்த மதிவல்லார் மாமரபு!

### நீணில ஆட்சி முறையில் நிமித்தகாரர் பங்கு

**['தெய்வத் தமிழ்' என்று செவியினிலே தேன்வந்து பாய்ந்தாற்போலப் புலவன் ஒருவன் எங்கள் மொழியைப் புகழ்ந்து பாடினன்- அது புகழ்ச்சியல்ல, உண்மை உரை என்பதைப் பல்கலைப் பண்பாட்டாராய்ச்சியிற் பதிந்திருக்கும் இக்கட்டுரையாளர்—அறிஞர், ஆய்ந்து ஆய்ந்து அழகாக அறிவுறுத்துகின்றார்.]**

பண்டைத் தமிழர் நாகரிகத்தில் சிறந்து பல் கலை வளர்த்துப் பாராண்டனர். ஆய கலைகள் அறுபத்து நான்கும்' அவர்கள் அறிந்திருந்தனர். "எண்ணென் கலைகள் இசைந்துடன் போக" என்று சிலப்பதிகாரம் பாடிற்று. அவற்றுள் ஒன்று 'வான நூற் கலை' அன்றைய ஆட்சியிலே அரசன் தலைவனுக இருந்தான். அவனுக்கு வேண்டிய ஆலோசனைகள் கூறுவதற்கு அவனைச் சுற்றி ஐம்பெருங் குழுவும் எண்பேராயமு மிருந்தன.

"அமாத்தியர் புரோகிதர்
சேனு பதியர்
தவாத் தொழிற் றூதர்
சரண ரென்றிவை
அரசர்க் காகும் ஐம்பெருங்
குழுவே;
காரணர்க் கிளைஞரும் கரும
விதிகாரரும்
கனகச் சுற்றமும் கடைகாப்
பாளரும்
நகரமாக்களும் நளிபடைத்
தலைவரும்
இவுளி மறவரும் யானை வீரரும்
அரசர்க் கெண்டுணை யாகுமென்ப;
அடுத்த நட்பாளரும் அந்தணு
ளரும்
மடைத் தொழி லாளரும்
மருத்துவக் கலைஞரும்
நிமித்த காரரும் நீணில
வேந்தர்க்
குரைத்த வைம்பெயர் உறுதிச்
சுற்றம்
இங்ஙனம், உரைத்தமுப் பாலும்
உயர்குடை வேந்தர்க்குப்
பகுத்த பதினெண் கிளைப்பா
லோரே"

இங்கு 'நிமித்தகாரர்' என்று குறிப்பிடப்பட்டோர் வானநூலறிஞர்களே. தமிழரசரின் அவையில் சோதிட வானநூற் கலைஞன் ஒருவனுக இருந்ததைத் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. "மறுவில் செய்தி மூவகைக் காலமும் நெறியினுற்றிய அறிவன் றேயமும்" என்று தொல்காப்பிய புறத்திணை 75-ல் கூறப்படுகின்றது. அதாவது பகலுமிரவும் இடைவிடாது வானத்தைநோக்கி மின்னும், மீன் வீழ்வும், தூமமும், ஊர்கோளும், கோணிலையும் மழைநிலையும் பார்த்துக் கூறலாம். அறிவன் வானநூற் கலைஞன் "திரிவின்றி விண்ணிவ் வுலகம் விளைக்கும் விளைவெல்லாம் கண்ணியுரைப்பான் கணி" என்று புறப் பொருள் வெண்பாமாலை 174) குறிப்பிடுகிறது. 'பனியும் வெயிலும் கூதிரும் யாவும் துனியில் கொள்கை யொடு நோன்மை யெய்திய தணிவுற் றறிந்த கணியன் மூல்லை' என்று இளம்பூரணர் கூற்றுலும் அறிவன் என்றால் கணியனே என்று வலியுறுகிறது. சிலப்பதிகாரத்தில் 'பெருங்கணி' (22 : 8, 26 : 3, 28 : 222) என்று மூன்றிடத்தில் குறிக்கப்பட்டுள்ளது. அரும்பதவுரையாசிரியர் 'பெருங்கணி – கணிதவிவர்த்தகன்' என்பர். பெருங்கணி – நிமித்திகன், சோதிடன், கணியன், கணிபெருங் கணி, அறிவன் என்பன வானநூல்அறிஞரைக் குறிக்கும்.

**ஐந்திணைப் பகுப்பு**

தமிழகம் ஐந்திணையாகப் பகுக்கப்பட்டு இருந்தது. இந்த ஐவகைத் திணைக்கும் காலமும் இடமும் முதற் பொருளாகும். தமிழ் மக்கள் காலத்தை ஆறு பருவங்களாகவும் நாளை, பெரும் பொழுது சிறு பொழுது நண்பகல் என்றும் பிரித்திருந்தனர். பருவ காலங்களைச் சரியாகக்

தொடர்ச்சி 3ம் பக்கம்

# ×இலங்கைவாழ் இந்தியர்களுக்கு மொழிப்பிணக்கில்லையா?

## புது அரசாங்கத்திலே மிதமிஞ்சிய நம்பிக்கை எதற்காக?

இலங்கைச் சனநாயக மாநாட்டின் பதினுருவது ஆண்டுக் கூட்டத்திலே தலைமைவகித்த திரு. K. இராசலிங்கம் அவர்கள் நிகழ்த்திய பேருரையிலே திரு. பண்டாரநாயகவின் அரசாங்கத்தை மிகவும் பாராட்டியிருப்பது ஆராய்ச்சிக்குரியதாகின்றது. இலங்கை அரசியலிலே ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டதாகக் குறிப்பிட்ட தலைவர் மக்கள் ஐக்கிய முன்னணியார், நாட்டின் எதிர்கால முன்னேற்றத்தை உருவாக்குவதிலேபொதுசனம்பெரும் பங்கெடுத்துக்கொள்ளும் வகையில் வசதிகளையளிக்கும் என்பது உண்மை எனக் குறிப்பிட்டார்.

ஈழத்திலே பொதுநன்மை ஏற்பட வேண்டுமே யானல் இங்குள்ள பல்வேறு சாதியினரும் ஒரு குடும்பமாக ஒத்துழைத்தல் அத்தியாவசியகம் என்பது யாவருமறிவர். ஆனல் இப்பொழுது ஆதிக்கம் பெற்றிருக்கும் ம. ஐ. மு. கட்சியார் தமிழ் பேசும் மக்களுக்காகப் பேசும் உரிமையைப் பெறுதவர்களாகையாலும் இன்னமும் தமிழ் மொழியை ஒதுக்கிவிட அயராதுழைக்கின்றவர்களாகையாலும் இந்நாட்டின் பொதுநன்மைக்காக அரசு நடத்துவார்கள் என்று யார் நம்புதல்முடியும் என்ற கேள்வியைத் திரு. இராசலிங்கம்அவர்கள் ஆராய்ந்து பார்க்காதுவிட்ட காரணம் யாதோ?

திரு. பண்டாரநாயக பாரதப் பிரதமர் நேருப் பெரியாரின் உற்ற நண்பர் என்று கூறிவிட்டால் சனநாயக ஆட்சி முறையைத் தவருது நடத்தப் போகின்ருர் என்பது கருத்தாகாது. நேருப் பெரியாருடன் எந்த அமைச்சரோ பிரதமரோ நட்புக்கொள்ள நாட்டங் கொள்ளாதிருக்க மாட்டார் என்பது மட்டும் உண்மையேயன்றி அப்பெரியாரின் நல்லெண்ணத்தை நா... கின்ரோமென்று நாளுக்... நாள் அறிக்கைவிடுக்கின்... அத்தனை அமைச்சர்களு... சனநாயகப் பண்பாட்டை... பாதுகாக்கும் பண்பி... அரசு நடத்துவார்க... என்று எதிர்பார்ப்பதற்... என்னசான் றிருக்கின்ற...

தொடர்ச்சி 6-ம் பக்கம்

அரசியல் அலை

# விடுமுறை நாட்கள் அதிகரிக்கும் விரைவு

## புது அரசியலிற் பொதுவாய் எல்லாம் விடுமுறையா?

வேலையில்லாத் திண்டாட்டத்தை விலக்குவதற்கு ஒரு வழி வி... முறைகளைக் கூட்டுவதே. இது பொருளாதார முதநூ... றணிபு அல்ல வழிநூல் வகுக்கும் நெறியுமல்ல. இல... கையில் இப்போழுது ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கு... நவீன அரசாங்கத்தின் ஏற்பாடு.

மாற்றம் செய்வதே தேர்தல் மதிக்கேற்றவழிஎன்று புறப்பட்ட மக்கள் ஐக்கிய முன்னணியானது ஐ. தே கட்சித் திட்டத்தில் ஒன்றில் மட்டும் உடம்பாடாகி விட்டது. விடுமுறை நாட்கள், வைசாக விழாவுக்கு வேண்டியளவுஇருந்தும் புத்த ஜயந்தி ஆண்டில் இன்னமும் தொடர்ந்து இரண்டு நாட்கள் வேலையற்ற நாட்களாக இருத்தல் வேண்டுமென்று கொத்தலாவலை ஆட்சியாளர் யோசித்தார்கள். பண்டாரநாயக அரசாங்கத்தார் அப்படி அந்தத் திட்டத்தை ஆமோதித்தல் தன் மானத்துக்குத் தகாதென்றாலும் மக்களைக் கைவசப்படுத்தல் அவசியம் என்றறிந்... வைகாசி 23, 24ம் நாட்க... டன் 25ம், 26ம் நாட்க... விடுமுறை நாட்களாக்கிவி... டனர்.

மதுவுக்கு விடுமுறை... மாடு ஆடு முதலிய வில... கினத்துக்கும் புள்ளின... துக்கும் விடுமுறை. அ... மட்டா? மக்களுக்கும் வி... முறை. ஈற்றில் எல்லா... விடுமுறையாகும் என்... திரு. பொதுசனம் சிந்திக்... ஆரம்பித்து விட்டார்.

சிறைத் தண்டனை விதிக்க... பட்டவர்களுக்கும் சில மாதங்... ளுக்கு விடுமுறையாம்.

அரசாங்க அலுவலாளர்களி... ஒருசாராருக்கு அரைமாத வே... னம் முற்பணமாகவும் கொ... படுமாம்.

அரசியல் ஆழியில்அலை அடி... கின்ற அதிர்ச்சியால் அரசியல்... ஆழியும் இல்லாமலே போகு... காலம் எதிரே வருகின்ற... போலும் என்று பலர் கடை... யாக எண்ணுகின்றார்கள்.

ஈழத்திலே மதவிழாக்கள் ப... தர்களுக்கு மாத்திரம் உள்... னவா? இதர மததவர்களு... கும் இருக்கின்றனவா? இந்து... கள், இசுலாமியர், கிறித்தவ... கள் இவர்கள் மதவிழாக்களை... புத்தஜயந்தி போன்று கொ... டாடுவது இந்நாட்டுக் கலாசார... துக்கு ஆகாதா?

THE SAIVAPRAKASA PRESS

திருச்சிற்றம்பலம்.

வாழ்கஅந்தணர்வானவர்ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்.

# இந்துசாதனம்

யாழ். துர்முகி௵ வைகாசிமீ ௫ உ வெள்ளிக்கிழமை

## துணிந்தபின் எண்ணுகின்றார்களா!

முன் வழங்கி வந்த அரசியல் அமைப்புநடைமுறை ஆதியவற்றை முற்றாக மாற்றிப் பொதுவாகப் புத்தம் புதிதாக்குவதற்குப் புதுப் பாராளுமன்றத்தில் ஆதிக்கம் பெற்றிருக்கும் மக்கள் ஐக்கிய முன்னணியார் முயற்சி செய்து வரும் அவசரத்திலே எங்கே எதை எவ்வாறு தொடங்கித் தொடர்ந்து முடிப்பது என்றறியாது எலிகள் பல கூடிய நிலையில் நின்று தத்தளிக்கின்றார்கள். புதுமைக்காக எதையும் மாற்றி விட்டுப் பயன்பெறுதல் முடியாது. அவ்வுண்மை அரசியலைப் பொறுத்தவரையில் பொய்யாகாது.

அமைச்சவையிலே அநுபவமற்ற அரசியல்வாதிகள் அர்த்த சாமத்திலே குடை பிடிக்கும் பெருமையிற் பேராசை யுற்றுப் பித்துக் கொண்டார்கள்போல நன்றிது தீதிது என்ற ஆராய்ச்சி எள்ளளவுமின்றிச் செய்துமுடிக்க முடியாத திட்டங்களை யெல்லாம் கொண்டு வருகின்றேம் எனச் செய்தித் தாள்களுக்கு அறிவித்தல் கொடுத்து விடுகின்ற அறிவின்மையைக் கண்டு பிரதமர் பெருங் கவலைப்படுகின்றார் என்பதை மக்கள் அறியத் தொடங்கி விட்டார்கள்.

சீனி விலை குறைப்பதற்குச் செய்த ஒழுங்குகள் போலவே 'சிங்களமே அரசவரிசைமொழித்'திட்டத்தையும் கொண்டுவர ஏற்பாடுகள் செய்துவிட்டுச் சற்றுத் தாமதித்து அதை ஆராய்ச்சிக் குழுவொன்றின் பரிசீலனைக்கு விடுத்தார்கள். இப்பொழுது சிறுபான்மையினரின் சிந்தை என்னவாயிருக்குமோ என்று அறிய ஆயத்தஞ்செய்கின்றார்கள். இதற்கிடையிலே சிங்களத்திலே அலுவல்களைச் செய்து முடிக்கலாமா என்று உயர் நீதி மன்றம் தொடங்கி உள்ளூர் ஆட்சி நிலையங்கள் ஈறாகச் சுற்றுநிருபம் விடுத்துச் சோதனை நடத்துகின்றார்கள். அரசியலை வெறும் விளையாட்டாக வேடிக்கையாக விகடக்கூத்தாக மாற்றியமைப்பதில் வெற்றிபெற்றார்களே யன்றிப் புதுமை புகுத்த வந்த மக்கள் ஐக்கிய முன்னணியார் ஏனையவற்றிலே கைப்படைந்து செய்வதறியாது பின்வாங்குகின்றார்கள் என்பதில் ஐயமில்லை.

## வாழ்க்கை வானில்

— வளர்மதி

### சந்தேகமில்லையாம்!

சிங்களமே தனி அரசகரும மொழி ஆதும் என்பதிலே சந்தேகமேயில்லை என்று கைத்தொழில் மந்திரி சந்தேகமில்லாது கூறினராம். சந்தேகம் ஏற்பட்டிருக்கின்றதென்று யார் சொன்னர்கள்? மக்கள் (சிங்கள) மனத்திலே எழும்பாத ஒரு தனமையை இருப்பதாகக் கருதி இந்த மந்திரியார் இந்தச் சந்தேக நீக்கப் பேச்சை நிகழ்த்தியதின் விபரீதம் ஒன்றுஉண்டு. சந்தேகம் இருக்கின்றதென்று மக்கள் சந்தேகப்படுகின்றார்கள் என்றுலல்லவா சற்றுத் தாமதிக்கும் பிரதமரை எட்டி அடி வைக்கச் செய்யலாம்!

### சந்தேகமிருக்கின்றதாம்!!

ஆனல் உயர்தர நீதி மன்றத்திலே சிங்கள மொழியையே நடைமுறைக்குக் கொண்டு வருவதிலே சந்தேகமிருக்கின்றதாம்! தீர்ப்புகளையெல்லாம் சிங்களத்திலே எழுதுவது இப்பொழுது முடியாத காரியம் என்று உயர் நீதிமன்ற நீதிபதிகள் சந்தேகங் கொள்கின்றார்களாம். உயர் நீதி மன்றத்துத் தீர்ப்புகளைச் சிங்களமாக்குவதை வழக்குகளில் ஈடுபடுகின்றவர்களும விரும்பமாட்டார்கள்

### சனநாயக ஆட்சியிலே சம்பா உணவு

மாற்றம் கொண்டு வந்த மந்திரிசபையின் துரிதமான நோக்கம் உணவு வகைகளிலும் சென்று விட்டது. வெள்ளை உடைக்கு வெள்ளைச் சம்பா உணவு வேண்டியது பொருததமல்லவா? ஆனல் விலையளவிலே சனநாயகப்பண்பு தோற்றவில்லை. பொது மக்கள் வழமையான உணவோடு நிற்க வேண்டிய நிலை மாறவில்லை. பணம் படைத்தவர்களுக்கு மனம் குளிர விலைப்படிவு!

### மந்திரி சபையில் வாய்ப் பூட்டு

சாதாரண அங்கத்தவராகக் காலிப் பிரதிநிதி ஏதாவது பேசிக்கொண்டே இருப்பார் என்பது உலகறிந்த உண்மை. இந்த இயல்பான உடற் கோளாற்றை உடனடியாக மாற்ற முடியுமா? மந்திரிப் பதவியில் அமர்ந்து விட்டார் என்றுல் அப்பழக்கம் தானக மாறுமா? கல்விப் பகுதியிலே கட கட தட தட சட சட வென்று மாற்றங்கள் கொண்டு வருவேன் என்று வாயாடி வந்த மந்திரியார் தகநாயகவின் காதிலே பிரதமர் மந்திர உபதேசஞ் செய்திருக்கின்றாராம். கற்பூரம் ஏற்ற முன்பு கால் தாண்டவமாடுவது கூடாது என்பதுதானாம் இந்த இதோபதேசம்.

### மேத்தானந்தாவின் மதி விபரீதம்!

சம உரிமை இரு மொழிகளுக்கும் அளிப்பது சன

தொடர்ச்சி 5 ம் பக்கம்

ஒன்றைச் செய்து முடிக்கும் வரையும் உண்டாகக் கூடிய இடையூறுகள் யாவை? இவற்றைநீக்குவது எங்ஙன்? நீக்க முடியாத வழி வேறு எவ்வாறு நடந்து கொள்ளலாம் என்று இன்னன பலவற்றைப் பல்காலாராய்வார் அறிஞர்கள். அமைச்சியலிலே இந்த அறிவு பெரிதும் வேண்டப்படுகின்றதென்பதை வள்ளுவனர்,

"பொருள் கருவி காலம் வினை
யிடனொடு ஐந்தும்
இருள் தீர எண்ணிச் செயல்"

என்று விளககியிருக்கின்றார். இந்த ஐவகை வசதிகள் இருக்கின்றனவா என்றுமயக்கந்தீரச் சிந்தை தெளிதல் வேண்டும் எனப் புவலர் இடித்துரைக்கின்றமை ஒன்றே அரசியல் ஞானம் எத்துணையாக அமைச்சர்பால் வேண்டப்படுகின்றதென்பதைக் காட்டும். அவ்வாறு எண்ணுதலோடமையாது,

"முடிவும் இடையூறும் முற்றி
யாங்கு எய்தும்
படு பயனும் பார்த்துச் செயல்"

வேண்டும் என்று மேலாக இன்றியமையாதகுண நயத்தையும் குறிப்பிடுகின்றார் மக்கள் ஆட்சி முறையை பண்டு வகுத்த பலகலைப் புலவனர்.

துணிந்தபின் எண்ணுவது இழுக்காகும் என்பதை இனிமேலாவது புது மந்திரி சபையார் அறிந்து பொறுமையாக அமர்ந்து புத்தி சாதுரியமாகவும் பொது மக்களின் பிறப்புரிமைகளுக்கு முரண்பாடில்லாத வகையிலும் அரசியலை நடத்துதல் ஆண்மையும் அழகுமாகும் என்று அன்னருக்கு மீண்டும் எடுத்துக் காட்டுகின்றேம்.

# மாற்ற முன்னணி வாயு வேகம்!

—————o—————

**சகடக்கால் சொல்லும் சரித்திரம்**

### பெயர்ப் பலகைகள் படும்பாடு!

முச்சிங்கள முன்னணி முன்னெருபொழுது பெயர்ப் பலகைகளிலே படையெடுத்து தங்கள் கைப்பலத்தைக் காட்டி வந்தார்கள். தேர்தல் இடையிட்டதால் வேலை தடைபட்டது. இப்பொழுது அச்சிங்கள முன்னணி அச்சிலே புதுப்பெயருடன் பொதுத்தேர்தலிலே தோன்றிய ம. ஐ. மு. அரசியல் அலுவலகங்களிலே உள்ள பெயர்ப் பலகைகளுடன்பொருதிக்கொண்டிருக்கிறார்களாம். மாற்றம் விரும்பும் ம. ஐ. மு. மொழியை மாற்றுவதோடு பெயர்களையும் மாற்றி விடுவார்கள் போலும். 'உவில்லியம் டீ. சில்வா' என்ற புறநாட்டுப் பெயரைத் தாங்கும் கைத்தொழில் மந்திரியின் பெயரைத் தனிச் சிங்களமாய் மாற்றி விடப்படாதா?

x x x

### ஐ. தே. கட்சியிலும் தொற்றி விட்டதா?

இந்த மாற்ற வியாதி ஐ. தே. கட்சியிலும் தொடர்ந்துவிட்டதுபோலும். கட்சிக்குத் தலைவராகத் திரு. இடல்லி சேனநாயகவை வைப்பதோடுஅக்கட்சியின் பெயரையும் மாற்றியமைப்பதற்கு ஒரு ஆலோசனை இருக்கிறதாம்.

x x x

### கொடிவிடு தூது!

மக்கள் ஆட்சி யென்றுல் புத்தம் புதிய மத ஆட்சி என்று பொருள்படும் என்பதைக் காட்டுவதற்காகப் போலும் புத்த ஜயந்தி விழாக் காலத்திலே அரசினர் அலுவலகங்கள் மீது புத்தகொடி ஏற்றுவதற்கு ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன. சிங்கக் கொடி மூவரிச் சிங்கக் கொடியாகி இப்பொழுது பலவர்ணப் புத்தக் கொடியாகி விடும் மாற்றமும் மாற்றந்தானே. மாற்றம் மாற்றம் மாற்றம்! ம. ஐ. முன்னணியின் மனத்தடுமாற்றம்.

### ஒரே மேடையில் தமிழ்த் தலைவர்கள்

வலிகாமம் வடக்குத் தமிழாசிரியர் சங்கத்தின் முயற்சியினுல் வருகிற சனிக்கிழமை முற்பகல் பத்துமணியளவில் மல்லாகம் சைவாங்கில வித்தியாசாலை மண்டபத்தில் மொழிப் பிணக்குப் பற்றிப் பல தலைவர்கள் ஒருங்கு சேர்ந்து சொற்பெருக்காற்றுவார்கள்.

திருவாளர்கள் ஜி ஜி பொன்னம்பலம், எஸ் ஜே. வி. செல்வநாயகம், சி. சுந்தரலிங்கம் ஆகியோர் இக் கூட்டத்திலே பங்கு பற்றுவார்கள்.

செந்தமிழுக்கு ஆபத்துத் தீர்க்க

## திருத்தல யாத்திரை

—————o—————

### திருஞானசம்பந்தர் திருநாளிலே திருக்கேதீச்சர வைபவம்

மொழிப் பிணக்கிலே தமிழுக்கு ஆபத்து விளையாது இறைவனருள் வேண்டுவதற்காகச் 'சிவ சிவ' யாத்திரைத் திருக்கூட்டம் ஒன்று யாழ்ப்பாணத்தில் வருகின்ற புதன்கிழமை பூநகரி, பல்லவராயன் கட்டு வெள்ளாங்குளம் புதுப் பாதையால் கால் நடையிலே யாத்திரை செய்வற்கு ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன.

திருஞான சம்பந்தத் திருத்தொண்டர் திருநாளிலே திருக்கேதீச்சரத்திலே விசேட அபிடேகம் முதலியனவும், சொற்பொழிவுகளும் நடைபெறுவதற்கு ஒழுங்குகள் ஏற்பாடாகின்றன.

பரமேசுவர மகாவித்தியாலய ஆசிரியர் திரு. மு. ஞானப்பிரகாசம் அவர்கள் இந்தப் புண்ணிய பணியை ஒழுங்குசெய்ய முன்வந்திருக்கின்றார்.

### இராணி எலிசபெத்து என்ன சொல்வார்?

இலங்கை மொழிப் பிணக்கைப்பற்றி இங்கிலாந்துக்குச் சென்று இராணியிடம் தமிழ் பேசும் மக்களின் கட்சியை எடுத்துரைக்கத் திரு. செ. சுந்தரலிங்கம் அவர்கள் தூது செல்ல எண்ணியிருக்கின்றார்.

### சிங்கப்பூர்த் தூதுக்குழுவின் மனக் கவலை

சிங்கப்பூருக்குச் சுதந்திரம் பெறும் வழிவகைகளைத் தேடுவதற்காக இங்கிலாந்து சென்ற தூதுக் குழுவினர் ஏமாற்றம் அடைந்துவிட்டார்களாம். சிங்கப்பூர் முதல் மந்திரி இடேவிட் மார்சல் தமது பதவியை விட்டுவிடலாம் என்று கருதப்படுகிறது. ஆங்கிலேய மந்திரிகள் சுதந்திரம் வழங்க அவ்வளவு இணக்கம் காட்டாமையே இதற்குக் காரணமாம்.

# பாராண்ட பண்டைத் தமிழர் பல்கலைப் பண்பாடு

———:o:———

1-ம் பக்கத் தொடர்ச்சி

கணிப்பதற்கு வான நூலறிவு இன்றியமையாதது. இது தொல்காப்பிய அகத்திணையில் விரிவாகக் குறிக்கப்படுகிறது. (தொல். அகத்திணையில் 1—16 சூ) 'ஆநிரை கவர்தல்' முற் காலப் போர் ஒழுங்குகளில் ஒன்று. நிரை கவர்வதற்கு நிமித்தம் பார்த்துப் போவதும், வெற்றியுடன் திரும்பிய பின் நிமித்தகாரனுக்குப் பரிசளிப்பதும் தமிழ் மன்னரின் வழக்கம். "மறைந்த வொழுக்கத் தோரையு நாளுந் - துறந்த வொழுக் கங் கிழவோற்கில்லை" எனத் தொல்காப்பியம் (களவி. 44 கூறுகிறது. பகைவனுடன் போர் தொடங்கு முன் சோதிட வானநூற் கலைஞனிடம் நல்லோரை (நன்னாள்) குறிப்பதும் பழந் தமிழர் வழக்கு. "குடையும் வாளும் நாள் கோளின்றி" என்று தொடங்கும் தொல்காப்பிய புறத் திணையிற் குறிப்பிடுவது இதனை வலியுறுத்துகிறது. சேரன் செங்குட்டுவன் கனக விசயரை வெல்லப் புறப்படுங் காலை நல்லோரை குறிக்கப்படுகிறது.

"ஆறிரு மதியினுங் காருக வடிப் பயின்று
ஐந்து கேள்வியும் அமைந்தோன் எழுந்து
வெந்திறல் வேந்தே வாழ்க நின் கொற்றம்
இருநில மருங்கின் மன்னரெல் லாம் நின்
தருமலர்த் தாமரைச் சேவடி பணியும்
முழுத்தம் ஈங்கிது முன்னிய திசைமேல்
எழுச்சிப் பாலை யாகென் றேத்த
மீளா வென்றி வேந்தன் கேட்டு
வாளுங் குடையும் வடதிசைப் பெயர்க்கென
உரவுமண் சுமந்த அரவுத்தலை பனிப்பப்
பொருந ரார்ப்பொடு முரசெழுந் தொலிப்ப
இரவிடங் கெடுத்த நிரைமணி விளக்கின்"
(சிலம்பு. 26 : 25-36)

[ஆறிருமதியுனும் காருக வடிப் பயின்று - பன்னிரண்டு இராசிகளிலும் உள்ள கோள்களின் நிலையைக்கற்று; ஐந்து கேள்வியும் அமைந்தான் - திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம். (கோள்களின் நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம் என்றும் கூறப்படும்) முதலிய ஐந்தின் கல்வியும் அமையப் பெற்ற நிமித்திகன் எழுந்து; முழுத்தம் - முகூர்த்தம்]. செங்குட்டுவன் வானநூலறிஞன் குறித்த நல்லோரையில் இராக் காலத்தில் வாளும் குடையும் கொண்டு போருக்குப் புறப்பட்டான்.

"வாளும் குடையும்
மயிர்கண் முரசும்
நாளொடு பெயர்த்து"

என்று சிலப்பதிகாரம் (5: 91 - 92) குறிப்பதும் காண்க. "நாட்கொள்ளலாவது நாளும் ஓரையும் தனக்கேற்பக்கொண்டு செல்வுழி அக்காலத்திற்கு ஓர் இடையூறு தோன்றிய வழித் தனக்கு இன்றியமையாதனவற்றை அத் திசை நோக்கிஅக்காலத்தே முன்னே செல்லவிடுதல்" என்பர் நச்சினார்க்கினியர். (தொல். பொருளதி: 13 - உரை). இன்றும் பிரயாணத்திற்கு நாள் பார்ப்பதும், இராகு காலத்தைத் தீய ஓரை என்று நீக்குவதும் கவனித்தற்குரியது. 'கணிமொழிந்த நாளிற் கடிமணமுஞ் செய்தார்" என்று கூறிற்று நள வெண்பா. (சுயம்வர. 165). பழந்தமிழர் நன் நாளும் நிமித்தமும் பார்ப்பதை "நாளும் புள்ளும் பிறவற்றி னிமித்தமும்" (தொல். புறத். 36), "புள்ளுப்புணர்ந் தினியவாக" (அகம். 136). "புள்ளோர்த்து" (அகம். 207) என்பவற்றாலும் அறியக்கூடியதா யிருக்கிறது.

**வளிமண்டல நிலையம் வகுத்த வரலாறு**

இங்கிலாந்தில் வாழ்ந்த பிளம்தீட் (Flamsteed) என்ற பிரபல வானநூலறிஞன், வளிமண்டல அவதான நிலையம் ஒன்று நிறுவுவதற்கு ஓரிடத்தையும் நல்லோரையும் குறித்தார். அந்நிலையம் 'கிறீன்விச்'சில் (Greenwich) இருக்கிறது. 1675-ல் தன் கணித முறையைச் செய்து முடித்ததும். கிறீன்விச் மேடராசியில் வருவதை அறிந்தார். பூமியை மத்தியாகக் கொண்டு பிரித்தபொழுது கிறீன்விச் 0 பாகையில் (zero degree) மேட இராசியில் வந்தது. 0 பாகையிலிருந்து (zero degree) கிழக்கு அல்லது மேற்காகப் போனால் ஈற்றில் 0 பாகையில்தான் வந்து சேர வேண்டும். 0 பாகையின் இரேகாம்சத்திற்கு (longitude) வேறு பாகையின் இரேகாம்சம் ஈடாக முடியாது. எனவே மேட இராசியில் வரும் 0 பாகையில் (zero degree) நிலயத்தை அமைத்தார். நல்லோரையிற் கட்டிய நிலயம் இன்றும் புகழுடனிருப்பது ஈண்டு கவனித்தற்குரியது.

பரிபாடல், பத்துப்பாட்டு விண்மீன்கள், அவைகளின் விளைவுகள் பற்றியும், புறநானூறு நாள் கோள் பற்றியும் குறிப்பிடுகின்றன. விண்மீன், நாள் மீன், கோள்மீன் என - இரு வகைப்படும். தனித்துப் பிரகாசிப்பவை நாள்மீன் என்றும், ஞாயிற்றின் ஒளியினாற் பிரகாசிப்பவை கோள்மீன் என்றும் கூறப்படும் முன்னையவை நட்சத்திரங்கள், பின்னையவை கிரகங்கள். "நின்றி நிலை இயர் நின் நாண்மீன் நில்லாது படாச் செயலீயர் நின் பகைவர் மீனே" (புறம். 24 என்பது நாள்மீனைக் குறிக்கின்றது. மற்றும், "வானத்து மீன்" (புறம். 109), "வானகமீன் பலபூப்பின்" (புறம். 129), "பன்மீன் இமைக்கும் மாக விசும்பின்" (புறம். 270), "வானத்து வயங்கித் தோன்றும் மீனினும்" புறம். 367), "வடமீன் புரையுங் கற்பின் மடமொழி" (புறம். 122), வானத்துச் சாலியொரு மீன்" (சிலம்பு. 1: 51: 52, "வடமீன் கற்பின் மனையுறை மகளிர்" (சிலம்பு 5: 229), "மீன்றிகழ் விசும்பு" (சிலம்பு. 10: 2), என்று குறிப்பிடுவதையும் காண்க.

**மணவினை நன்னாள்**

கோவலன் கண்ணகி மணவினை, மதிஉரோகிணியைக் கூடிய தினத்தில், நடைபெற்றது. சந்திரன் உரோகிணியைக் கூடும் பொழுது இடபவீட்டிலிருப்பான். இது அவனது உச்ச வீடாகும்.

"வான் ஊர் மதியம்
சகடணைய வானத்துச்
சாலி யொரு மீன்
தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான்
மறைவழி காட்டிடத்
தீவலம் செய்வது காண்பார்"
—(சிலம்பு. 1: 50-53,

(வான் ஊர்மதியம்-வானின்

தொடர்ச்சி 4 ம் பக்கம்

# நல் வாழ்க்கைக்கு வழி சைவச் சால்...

6-5-56 மாலை நவாலி சிந்தாமணிப் பிள்ளையார் கோவிலில் நாடகக்கலைஞர் திரு. சொர்ணலிங்கம் அவர்களது திருவிழாவில் வடஇலங்கை சன்மார்க்க சபையாரின் ஆதரவில் வட்டுக்கோட்டை அப்பர் திலகவதியார் கழகச் செயலாளர் திரு. நா. ஞானசம்பந்தன் அவர்கள் "சைவ வாழ்க்கை என்னும் பொருள் பற்றி நற் கருத்துக்கள் வாய்ந்த ஆராய்ச்சிச்சொற்பொழிவு ஆற்றினர்கள்.

பழையகாலச் சைவ உலகம் இருந்த நிலையினையும் இக்காலச் சைவ உலகம் இருக்கின்ற நிலையினையும் மிக விரிவாக விளக்கிக் காட்டினர். இக்கால இளைஞர்களுடைய நிலை மிகவும் வருந்தத்தக்க முறையில் இருக்கின்றதெனவும் அண்ணாத்துரை கருணாநிதி போன்றார்களது பொழுது போக்கு நூல்களைப் படித்துச் சிறிதளவேனும் ஆராய்ந்து பாராது அவர்களது மொழி அடுக்கில் மட்டும் கருத்தைவிட்டு மதிமயங்கிச் சமயத்தை மறந்து வாழ்கின்றனர் எனவும், இறை நம்பிக்கை அற்ற பொதுவுடைமைக்காரர்களது கொள்கைகளையும் கைக்கொண்டு இறை நம்பிக்கை அற்று வாழ்கின்றனர் ... வும் நம் தாய்மார்க... லாம் திலகவதியார்க... வும் மங்கையற்கரசிய... வும் மாறி இவ்விளை... ளைத் தடுத்து ஆட்கொ... சைவசமயப் பற்றினை ... டினாற்றான் சமய வா... கை மேன்மைபெறும் ... வும் கூறினர். சாத... யாலேதான் சைவ வா... கையைப்பெற இயலும்... வும், நமது சமய குரவர்... சரியை, கிரியை, யோ... ஞானம் முதலிய வழிக... வாழ்ந்து காட்டியுள்ள... எனவும், அவர்கள் வி... அடிப்படைதான் இன்... அசையாதிருக்கின்ற ... வும், நால்வர் வாழ்ந்து க... டிய நன்னெறியின் ... வாழ்ந்தாற்றான் நாம் ... பிறவிப்பெருங்கடலை நீ... தற்கு ஏதுவாய சைவவா... க்கை வாழ இயலும் எ... வும் மிகவிளக்கமாகக் கூ... ஞர்கள். ——

**சிந்தாந்தப் புலவர்**

சித்தாந்த பண்டிதர் ... கப் புலவர் பா. இராமநா... பிள்ளை அவர்கள்மூலம் சி... தாந்த அஞ்சல் வழிந... கற்றுத் தேறிய திரு. சி. சோதிநாதன் அவ... கட்கு சித்தாந்தப் புல... பட்டம் வழங்கப்பட்டது.

# உங்கள் நக்ஷத்திரம்? 

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராகா சிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 20—5—56 —— 26—5—56. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

நற்பயனுள்ள வாரம், உத்தியோகத்தைப்பற்றியோ குடும்ப அலுவல்களைப்பற்றியோ நற்செய்தி கிட்டும். பண இலாபம்கிடைக்கலாம் வியாழன் வெள்ளி சனி காலைகவனமாயிருத்தல்வேண்டும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

உத்தியோக முறையிற் சில தொந்தரவாலே தளப்பம் ஏற்படும். கதை காவுவோர் திருப்தியீனத்தை உண்டுபண்ணக்கூடும். பணக்கஷ்டமும் காணப்படலாம். ஆனல் நண்பர்கள் நல்லுதவியாயிருப்பர்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3,

வழமையிலும் பார்க்க வேலைப்பாரம்கூடும் மன அமைதி இராது. மறைமுகமான எதிரிகள் நெருக்கடியையும் விரும்பத் தகாத சூழ்நிலையையு முண்டு பண்ணுவர். ஆனல் வெற்றியடையமாட்டார். எனினும் எச்சரிக்கையாயிருக்கவும். வாரஇறுதியில் அந்நிலைமை நீங்கும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

மன அமைதி இராது. செலவு அதிகரிக்கும் புது முயற்சிகள் நேரடியாகக் கவனிக்கப்படல் வேண்டும். இன்றேல் நட்டமேற்படக்கூடும். ஆராய்வில்லாத அலுவல்களை விலக்கவும்.

**சிங்கராசி** மகம், உத்திரம், பூரம் 1ம் பாதம்.

சொந்த அலுவல்களிலே வேண்டத் தகாத மாற்றங்கள் வரும். புது முயற்சிகள் தாமதப்படும். புதன் தொடக்கம் தேக நிலை சீராகும்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

எதிரிகளாலும் விரோதிகளாலும் தொந்தரவு ஏற்படக்கூடும். செலவும் கூடிக்கொண்டே போகும். வார நடுப்பகுதி தொடக்கம் நெருக்கடி நிலைமை குணமாகும். வார இறுதியிற் பணஇலாபம் கிடைக்கும்.

**துலாம்** சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

சொந்தஅலுவல்களுக்கும் சமூகவேலைகளுக்கும் நல்லவாரம். தேகநலத்திலே குழப்பம் ஏற்படவுங்கூடும். சுற்றத்தவர்களின் கண்டனத்தாலே ,தளப்பம் நேரிடும் ஆனல அவர்களைப் பொருட்படுத்தாதுமுயற்சிகளைத் தொடர்ந்து செய்தல் வேண்டும்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

குடும்ப அலுவல்கள் மிகவும் சீர் குன்றும். தேகசுகக் குறைவும் தளப்பமும் காணப்படும். நாளாந்த வேலை ஒழுங்கில் மாற்றங்கள் சில எற்படக்கூடும். வார இறுதியில் விபத்துக்களைப்பற்றிக் கவனமாயிருத்தல் வேண்டும்.

**தனுராசி** மூலம் பூராடம் உ... கராடம் 1ம் பாதம்.

நல்லவாரம். எதிரிகளை வெ... றியடைதலும் மன அமைதி... காணப்படலாம். கிட்டிய சு... றத்தவர்களைப்பற்றிய நற்செய்... கள் கிடைக்கும். பணஇலாப... கிடைக்கக்கூடும், தேகநிலை கு... மாகும்,

**மகாராசி** உத்தராடம் 2, 3, 4 பாதம் திருவோணம் அவிட்ட... 1, 2ம் பாதம்.

தேக சுகக் குறைவு தோற்... லாம். வயிற்றுக் கோளாறு... ளுக்கு இடமுண்டு. குடும்ப... சூழலிலே நன்மை கிடையாது... பணவழியில்நல்லவாரம். செல... க்குவேண்டிய வருவாய் கிடை... கும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4 பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

முதலிரு நாட்களும் தொல்... கொடுக்கும். ஏனையவை நற்பல... தரும். செவ்வாய் தொடக்க... நன்மையுண்டு. புதுமுயற்சிகளி... அநுகூலமும் கீர்த்தியும் காண... படலாம்

**மீனராசி** பூரட்டாதி 4, உத்த... ரட்டாதி ரேவதி.

பொதுவாக நல்ல வாரம். பு... முயற்சிகளாற் பயன் தாமதமா... வரினும் தொடர்ந்தேர்ச்சியாயி... ருக்கும், நண்பர் சகோதரங்கள்... மிகவுமுதவியாயிருப்பர். காணிக... ளால் இலாபம் கிடைக்கும்.

# ...ங்கள் குறிக்கோள் என்ன?

---0---

...நிகழும் சித்திரை மாதம் ..., 20, 22, 25, 26 ந் திகதி ...ரில் கயாரோகணேஸ்வ... சிவன்கோவில் வருட...ற்சவ விழாக்களில் ...சவத் திருவாளர் பொன் ...ப்புக்குட்டி அவர்கள் ...றையே "நாம் ஏன் பிறந் ...தாம், காரைக்காலம்மை ...ர், ஆவிக்குமோசம் வரு ...ன்றுனருட் பதங்கள் ...விக்கவென்று நினைக் ...ன்றிலேன்" என்ற சொற் ...ரடரையுடைய கந்தரலங் ...ரச் செய்யுள் "திருக்கோ ...வில்லாத திருவிலூரும்" ...ன்னும் பொருள்கள் பற் ...ச் சைவப் பிரசங்கங்கள் ...சய்தார்.

திரு. அப்புக்குட்டி அவர் ...ர் பேசும்போது அரன் ...ணிக்காகவே இவ்வுடம்பு ...க்குக் கடவுளால்கொடுக் ...ப்பட்டதென்றும், காரைக் காலம்மையார் இல்லறத்திலே சைவ வாழ்க்கையை மேற்கொண்டு மெய்யடியார்க்கான பணிசெய்து அடியார்க்கு மாம்பழத்தைக் கொடுத்து பசிதீர்த்து அரனிடத்தில் பெற்று அரனடியாரை அரனாகவே பாவித்துப் பணிசெய்தல் வேண்டுமென்ற உண்மையை உணரவைத்த பண்பும் கணவன் மனைவி இல்லற தருமம் ஈட்டும்பொழுது அன்புமறனும் மேற்கொண்டு பண்பும் பயனும் பெறும் பெருமைகளை உணர்த்தியும், உடலை நம்பியிருப்பவர் அது நிலையில்லாதது ஆகையால் மோசம் போவார்களென்றும் அது இருக்கும்போது நாம் தேடவேண்டிய சிவபுண்ணியத்தைத் தேடவேண்டுமென்றும் எடுத்து விளக்கினர்.

---

# ...ாரரண்ட பண்டைத் தமிழர் பல்கலைப் பண்பாடு

3-ம் பக்கத் தொடர்ச்சி

...ட் செல்லும் சந்திரன்; ...கடு – உரோகணி)

...பிரமனுள் சகடு பண்டிபேசிய
...சதியே வையம்
...நுள் விமானந் தேரு ற்ரூது
...ரோணியே யுரோகிணிப்பேர்"

...ன்று உரோகிணியின் ...பயர்களைச் சூடாமணி கண்டுகூறுகிறது. உரோ...ணியின் உருவம் 'ஊற்...ல்'போல இருக்கும். பண்...டத் தமிழர் உரோகிணி...யத் திருமணத்திற்குச் ...றந்த நாளாகக் கருதினர்.

'அங்க ணிரு விசும்பு
விளங்கத் திங்கட்
சகட மண்டிய
துகடீர் கூட்டத்துக்
கடநகர் புனைந்து
கடவுட் பேணிப்
படுமண முழவொடு
பரூஉப் பண்ணை யிமிழ
வதுவை மண்ணிய"
—(அகம். 136)

...ன்று அகநானூற்றில் ...ருவதும் காண்க. சிலப்...திகார அரங்கேற்று ...ாதையில், "நலந்தரு ...ாளாற்" (சிலம்பு. 3: 123) ...இதற்குப் பொருந்திய நல்ல ...ாளிலே – என்று குறிப் ...பிடப்படுகிறது. நன்மை ...தரும் நட்சத்திரங்களையும் இராசிகளையும் பின்வரும் வெண்பா குறிப்பிடுகிறது

"பூராடம் கார்த்திகை
பூரம் பரணிகலம்
சேரா திரையவிட்டஞ்
சித்திரையோ-டாருமுறம்
...மாசி யிடபம்
அரிதுலை வான்கடகம்
பேசிய தேள் மிதுனம் பேசு"

[கலம்–இரேவதி; முறம்–விசாகம்; அரி – சிங்கம்; துலை – துலாம்;]

சித்திரை மாதம் வரும் சித்திரை நட்சத்திரம் ஓர் நன்னாள் போலும். பூம்புகார் நகரில் இந்திர விழாவினை "சித்திரைச் சித்திரைத் திங்களில்" ஆண்டு தோறும் நடத்தினர்கள். 'சித்திரை மாதத்துச் சித்திரைநாள் சிறந்ததென்கையால், சித்திராபூரணை யென்க' என்பர் அரும்பதவுரையாசிரியர். சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரமும் பூரணையும் கூடிய தினத்தில் இந்திர விழாவினை நடத்திப் பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளனும் சுரக்கென வாழ்த்திய வழக்கினைப் பின்பற்றிப்போலும் இன்றும் திருக்கோயில்களில் சித்திரைக் கஞ்சி வார்ப்பதும் சித்திரகுப்த விரதம் காப்பதும் நடைபெறுகிறது. சித்திரைக் கஞ்சி வார்த்தல் இந்திர விழாவினை நினைவூட்டுகிறது.

முழுநிலா (பௌர்ணமி) அமாவாசை முதலியவற்றையும் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. சான்றாக "மாகவிசும்பின் வெண்டிங்கள் மூவேந்தன் முறை முற்ற" (புறம். 400 "பன்மீனடுவத் திங்கள்" (மதுரைக்காஞ்சி.195) "பன்மீன் நடுவன் பால்மதி போல" (சிறுபாணாற்றுப் படை 219 "பன் மீனுப்பட்டிங்கள்" "மாரிவானத்து மீனுப்பண், விரிகதிரவெண்டிங்கள்" (புறம். 13 : 6, 396 : 26-27) கோண்மின்னு மீன் சூழ் குளிர் மாமதித் தோற்ற மொத்தே" (சீவக சிந். 882, நச்சினர் மேற்கோள்) என்று முழுநிலாவையும் "எண்ணாட் டிங்கள் அனைய" (புறம் 118) எண்ணாட் டிங்கள்' பொருநராற்றுப்படை 11) "கொளத்தகு திவவுத் திங்கட் கோணிரைத்தனையவாணி" (சீவக சிந் 559) என்று எட்டாம் பிறையையும், "குடமுதற் றோன்றிய தொன்று தொழுபிறை" (மதுரைக் காஞ்சி 193), "அந்தி வானத்து வெண்பிறை" (சிலம்பு 4: 23, "பிறைக்கொழுந்தே" (பாண்டிக்கோவை), "வளர்பிறை போல வழி வழிப் பெருகி" (குறுந்தொகை 283:1) "சுடர்பிறைபோலப் பெருக்கம் வேண்டி பெருங்கதை 2 6:35-6) என்று வளர்பிறையையும்; "குணமுதற் றோன்றிய வாரிருண்மதி" (மதுரைக்காஞ்சி 195) "நீள்கதி ரவிர்மதி" (கலித்தொகை 17:7) "குறைமதிக் கதிரென மாய்கவென் றவமென்றான்" கந்தபுராணம் மார்க்கண்டேய 59) என்று தேய்பிறையையும் குறிப்பிடுவதாலும் பழந்தமிழ் மக்கள் திதிகளின் இயல்பையறிந்திருந்தார்கள் என்பதை அறியக் கூடியதாயிருக்கின்றது.

வளரும்.

---


# கம்பராமாயணம்

(யுத்தகாண்டம்)

குப்பகருணன் வதைப்படலம்

(ஒன்று முதல் 170 பாட்டுக்கள்)

------ யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் வெளியீடு ------

பரமேசுவரக் கல்லூரித் தமிழ்விரிவுரையாளர்,
வித்துவான், பண்டிதர், சைவப்புலவர், **க. வேந்தனர் அவர்கள்** எழுதிய
விளக்கவுரையுடன் விரைவில் வெளி வரும்.

- ஒவ்வொரு பாட்டிற்கும், கொண்டு கூட்டு, பொருள், பொழிப்பு, விளக்கம், குறிப்பு எனும் உறுப்புகள் அமைய உரை எழுதப்பட்டுள்ளது.
- விளக்கத்தில் செய்யுள் நயம் விரிக்கப்படுகின்றது. செய்யுளை உணர்ந்து உணர்ந்து தீட்டிய உரை நயம் மாணவர்க்கு நல் விருந்தாகும்.
- உவமான உவமேய விளக்கம், மாணவர் உள்ளத்தில் பதியக் கூடிய முறையில் எழுதப்பட்டுள்ளது.

**இத்துடன்,**

**170 பாட்டுக்களையும் அவற்றின் பொருள்நிலைக்கு ஏற்பப் பத்தொன்பது பிரிவுகளாக வகுத்து, அப்பிரிவுகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி தலையங்கங்கள் கொடுத்துப் பின் ஒவ்வொரு பிரிவுகளின் கீழ் உள்ள பாட்டுக்களின் பொருளையும் தொகுத்துத் தெளிவான உரைநடையில் எழுதப்பட்டுள்ளது. இதனால் மாணவர்கள் மிக எளிதாகப் பாட்டின் பொருளை விளங்கிக்கொள்வார்கள்.**

மாணவர்கள் தாமாகவே படித்து, இலக்கியத்தை நயத்தற்கு வழிகாட்டும் வாய்ப்பான உரை.


---

# அன்பு பெருக்கும் இன்பப் பாடல்

தமிழ்ப் புலவர்
வ. மு. இரத்தினேசுவர ஐயர்

செந்தமிழ் நாடு செழிக்க அவதரித்தோர் பலர். சமய உண்மை காட்டினோர் சிலர். இராமன் ஆண்டாலென்? இராவணன் ஆண்டாலென்? என்று வாளா இருந்தாரும் பலரே! நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்பதைக் கடைப் பிடித்தவரே சீரியோர். பெரியாரும் அந்நிலை பூண்டவரே. அழியும் பொருள் அழியாப்பொருள் என்ற பாகுபாடு காண்பதே அறிவுக்கு அழகு. "நான் பிடித்த முயலுக்கு மூன்று கால்தான்" என்ற வாதம் மாறாது. ஆன்ம இலாபங் கிடைக்க முதல் நெறி அன்புதான். அன்பைச் சொரிந்து இன்பப் பாடல் நல்கினோர் சமய குரவர். தமிழ் செழிக்கப் பத்திப் பாடல்கள் தோன்றின. அவை நேற்று இன்று தோன்றியன அன்று. தமிழும் ஆரியமும் சமத்துவமானவை.

அடியார்கள் மனம் வாக்கு காயம் என்ற இவற்றை நிறுத்தி இறைவனைப் பாடினர். நாம் ஐவகைச் சட்டைக்கு மேல் ஆறாவது சட்டை இடுவதுபோல் அருட் பாசுரங்களுக்குப் போர்வை இட வேண்டாம். பரமபதியான சிவபிரானுடைய திருவருள் வயப்பட்டு (சிவபோதம் சிவபோதமாக!) அருளப்பட்டவை தேவார திருவாசகம் முதலியன. தமிழ் ஆரியம்என்ற புராதன மொழிகளில் இன்ப நூல்களும் அன்பு நூல்களும் நிரம்ப இருக்கின்றன. சொல்லும் பொருளுமென இறைவனும் சத்தியும் பிரிவின்றி இருப்பதை இன்பக் கவிகள் நன்கு விளக்குகின்றன. கனிந்த பாடல்களை அளவிட முடியாது.

ஐய விபரீதங்கள் ஒருவருக்கும் நன்மை தாரா. ஆனல் சமயகுரவர்களின் பாசுரங்களைப் படித்து உட்பொருளை ஆய்வது பிழையன்று. இறைவனருளிய வேத சிவாகம நிந்தகராவது பேதமையாகும். "வடமொழியுந் தென்றமிழு மானவன்" என்று கூறிய பேரடியாரை இகழலாமா" பாதிச் சுரைக்காய் கறிக்கும் பாதிச் சுரைக்காய் விதைக்கும் ஆகுமா? வேதம் கருமகாண்டம் ஞானகாண்டம் போசன காண்டம் என்ற பிரிவுகளையுடையது. ஆகமம் சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நான்கு பாதங்களை யுடையது. அவரவர் பக்திக்கேற்ற பயன் கிட்டும்.

"முதலாகும் வேதம் முழுதா
கம மாகப்
பதியான ஈசன் பகர்ந்த
திரண்டு"

இவை ஒருபுறமிருக்க இன்பப் பொருள்களினும் ஈசன் இனியன்.

கனியினுங் கட்டிபட்ட கரும்
பினும்
பனிமலர்க் குழற் பாவை நல்லா
ரினும்
தனிமுடி கவித் தாளு மரசினும்
இனியன்றன் னடைந்தார்க்கிடை
மருதனே".

'பானினைந் தூட்டுந் தாயினுஞ்
சாலப் பரிந்து நீ
பாவியே னுடைய
வூனினை யுருக்கி யுள்ளொளி
பெருக்கி
யுலப்பிலா வானந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந்
திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்துசிக்கெனப்
பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே"

அன்புக் கடலாய் இன்ப ஊற்றாய் அக விருளாகிய அகங்காரத்தை அழிக்கும் பாசுரப் பேரொளி வீசினல் மக்கள் ஆன்ம இலாபத்தைப் பெறலாம்.

---

'மனத்தொடு வாய்மை
மொழியிற்
றவத்தொடு தானஞ்
செய்வாரிற் றலை"

## சமாதான இயக்கத்தைப்பற்றி
# சமாதானப்பரிசுபெற்றோர்

### அமெரிக்க அபிப்பிராயம்

"உங்கள் கருத்துப்படி சமாதானம் அடைவதற்கு நாடுகளும் தனிப்பட்டவர்களும் இன்று செய்ய வேண்டிய மிகப் பெரிய சேவை என்ன?

ஒரே வகையான சிறப்புப் பெற்றுள்ள ஆண்கள் ஆறு பேரையும் பெண்மணி ஒருவரையும் "காலியர்ஸ்" என்ற அமெரிக்கச் சஞ்சிகை அண்மையில் கேட்ட கேள்வி இது. அவர்கள் அனைவரும நோபல் சமாதானப் பரிசு பெற்றவர்கள்.

"மக்கள் பரஸ்பர முயற்சியால் சமாதானம் பெறவேண்டும். இல்லையேல் அது இல்லாமல் நிச்சயமாகக் கூட்டோடு அழிய வேண்டும்" என ரால்ப்புஞ்ச் வெளியிட்ட கருத்தை உலகமக்கள் கடைசியாக நேருக்கு நேர் உணரும்படியான நிலைமையை அணு ஆயுதங்கள் கொண்டு வந்துவிட்டன என அவர்கள் ஒப்புக்கொண்டிருப்பதுதான் சமாதானத்தைப்பற்றி அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கைகளின் மிக முக்கியமான பகுதி. சமாதானம் அல்லது பரஸ்பர அழிவு என்னும் பிரச்னை வரலாற்றுப்படி முதலாவது குடும்பங்களுக்கும், பிறகு சமுதாயங்களுக்கும் நாடுகளுக்கும் இப்பொழுது உலகத்துக்குமாகத் தோன்றியுள்ளது. தன் குடும்பத்திலும் நாட்டிலும் சமாதானத்தை உருவாக்கிய மனிதன் உலகமனைத்துக்கும் இப்பொழுது ஒரு சமாதான வாழ்க்கையை அடைய முடியுமா?

சமாதானம் என்பது ஓர் எதிர்மறைப் பொருளன்று என நோபல் பரிசுபெற்ற இவர்கள் வலியுறுத்திக் கூறுகின்றனர். யுத்தம் ஏற்படுவதற்கான காரணங்களை அகற்றுவதினால் மட்டும் சமாதானம் வந்துவிடாது. உலகத்தின் சமாதானத்துக்கான காரணங்களை அமைப்பதினால் மட்டுமே சமாதானத்தைப் பாதுகாக்க முடியும். பழமொழி சொல்வதுபோல், ஒன்றை வைத்துவிட்டுத்தான் ஒன்றை எடுக்க முடியும்.

சமாதானம் ஏற்படவேண்டுமென்றால் உலகத்தில் எதனை வைக்கவேண்டும்? ஜெனரல் மார்ஷலின் அபிப்பிராயப்படி, மக்கள் கல்விமூலம் கடந்த யுத்தங்களின் காரணங்களை உணர்வது மிக முக்கியமாகும். "நிரந்தரமான சமாதானத்தை நாம் தேடுவதில் பெரிய அடிப்படைக் கல்வி உலகத்தில் தான் இருக்கின்றது." இன்றைய உலகில் வாழ்வதற்குப் போர் தேவையில்லை என்பதை உலகமெங்குமுள்ள கோடிக்கணக்கான ஆண்களும் பெண்களும் உணர்ந்து கொள்ளும் பொழுது போரை ஒழிக்கும் பாதையில் நாம் நடப்பவர்களாவோம் என்றார் மார்ஷல்.

கல்வியின் அவசியம், அதனால் விளையும் பயன் ஆகியவற்றை Dr. ஆல்பெர்ட் ஷ்வைட்ஸரும் வற்புறுத்திக் கூறினார். தேசியத்தின் அடிப்படையில் நாகரிகத்தைப்பற்றிய நெடுநியான பழங்காலக் கருத்துக்களை உலகம் கைவிடும்பொழுது, நாகரிகத்தைப்பற்றிய தார்மீகக் கருத்துப்படி நடக்க இணங்கும் நாகரிக இராச்சியம் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியும் என்றார் அவர். "நாட்டினரையும இராச்சியங்களையும் அல்லாமல மனிதவர்க்கம் அனைத்தையும் நாம் கவனிக்கிறோம்" என்றார் Dr. ஷ்வைட்ஸர்.

பிரிட்டனைச் சேர்ந்த சர். நார்மன் ஆன்ஜெல், தேசிய நினைப்பிலிருந்து விடுபடவேண்டும் எனக் கூறினார். இன்றைய நாடுகள் பலவற்றின் – உதாரணமாகப் பிரிட்டன், ஜெர்மனி, இந்தாலி ஆகியவற்றின் — பிரதேசங்கள் ஒரு காலத்தில் போரிடும் பல நாடுகள் வசம் இருந்தன என்பதை அவர் சுட்டிக்காட்டினார். நாடுகளுக்கிடையே சமாதானத்தை நிலை நாட்டும பொது ஆத்மீக நம்பிக்கை, பொது அரசாங்கங்கள் ஆகிய பிணைப்புகளை உலகமனைத்துக்கும் பரப்புவதுதான் சர்வதேச யுத்தங்களைத் தடை செய்யும நடவடிக்கை என அவர் எடுத்துரைத்தார். கூட்டுறவு முயற்சியைப் புறக்கணித்து தேசிய சுதந்தரத்தைத் தெய்வீகமாகக் கருதுவது தவறாகும். இரண்டாவது உலக யுத்தத்தில் வெற்றிக்காக ஒன்றாக முயற்சி செய்த நேச நாடுகள் முழுச் சுதந்தரத்துடன் தான் இருந்தன, கூட்டுறவை ஏற்படுத்துவதற்காக நாம் மற்றொரு பேருரை எதிர்பார்க்கக் கூடாது. அது காலதாமதமாகிவிடும்.

இன்று மிகப் பெரிய அளவில் காணப்படும் சர்வதேச ஒத்துழைப்பு, ஐ. நா. ஸ்தாபன இயக்கம் ஆகியவை "நாம் இப்பொழுது ஒரு உலக அரசாங்கத்தை அமைக்கவில்லை என்பதையும் ஆனால் செழிப்பு மிக்க உலக சமூகத்தைத்தான் அமைக்கின்றோம் என்பதையும் காட்டுகின்றன" எனச் சமூக விஞ்ஞானி எமிலிகிரீன் பால்ச் தெரிவிக்கின்றார். "அமெரிக்காவின் இராச்சியங்களுக்கிடையே போர் என்பதை நினைக்கமுடியாதபடி செய்யும் காரணங்களாகிய பொதுவான அக்கறைகள், ஆழமான ஆத்மீக உணர்ச்சி இணைப்புகள் இவற்றின் மூலம் இத்தகைய (உலக) சமுதாயத்திலும் யுத்தத்தைப்பற்றி நினைக்கவே முடியாது' என்றார் அவர்.

நோபல் பரிசு பெற்ற இவர்களின் அறிக்கைகளில் அடங்கியுள்ள முக்கிய விஷயங்களில் ஒன்று— அவர்கள் குறிப்பிட்டதைத் தவிர — அவர்கள் குறிப்பிடாததுமாகும். தினசரிப் பத்திரிகைகளில் முக்கிய இடத்தைப்பெறும் இராச்சியங்கள் இராச்சியக் குழுக்கள் ஆகியவைகளுக்கிடையே நடைபெறும போட்டிகளைப் பற்றி அவர்களில் ஒருவரும் பிரத்தியேகமாகக் குறிப்பிடவில்லை. எவர் செய்வது தவறு எவர் செய்வது சரி என்பதைப்பற்றியும் ஒருவரும் விசேடமாய் ஒன்றும் கூறவில்லை. சமாதானத்தைப் பெறவேண்டுமென்றால் மக்கள் கூட்டாகவும் தார்மீகத் துறையிலும் ஆத்மீகத் துறையிலும் என்ன செய்ய வேண்டும் என்ற பெரும் பிரச்னையைத்தான அவர்கள் அனைவரும் குறிப்பிட்டனர். தேசிய எல்லைகளைக் கடந்து நின்றது அவர்கள் அக்கறை.

சமாதானத்தைப் பற்றிய இந்த விவாத அரங்கை ஆரம்பித்து வைத்த "காலியர்ஸ்" பத்திரிகை ஆசிரியர் பால் ஸி. ஸ்மித் சலவாயுக்குண்டிலிருக்கும் தீப்பந்துக்கும் மோஸஸுக்குக் கடவுள் தோற்றமளித்தார் எனக் கூறும் பைபிலில் வரும் எரியும் புதிருக்கும் உள்ள ஒற்றுமையைக் குறிப்பிட்டு "எரியும் புதிரிலிருந்து மோஸஸிடம் கடவுள் பேசியதுபோல் இப்பொழுது நம் ஆகாயத்தைப் பாதித்துள்ள மேகத்திலிருந்து அவர் மக்களிடம பேசக்கூடும்" எனக் கூறினார்.

இந்த நாடு அந்த நாடு என்றில்லாமல், எல்லா மக்களும் தங்களுடைய ஆன்மார்த்த சக்திக்குப் புத்துயிர் அளித்து, பீதி அடைந்துள்ள உலகத்தில் சமாதானம் ஏற்படுத்த வேண்டிய தங்கள் பொறுப்பைச் சரியாக உணர்ந்து நடக்க வேண்டும் என அணுத் தீப்பந்து ஒரு எச்சரிக்கையாய் விளங்குவதாக உலகத்தின் ஏழு மாபெரும் பிரமுகர்கள் கருதுகின்றனர்.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
1 அச்சுவேலி தாமோதரம் குணரெட்டினம்
2 பெண் பரமேசுவரியும்
வழக்காளிகள்
இல M B 250
எதிராக
தம்பாலை
1 வல்லிபுரம் பொன்னையாவும் பெண்
2 முத்தம்மாவும்
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B 250 ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணி 1956 ஸு ஆடி மீ 17 உ செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி அச்சுவேலி கோயிற்பற்று பததவேனிஇறை கும்ப கிணற்றடி பரப்பு நில இலா $2\frac{3}{4}$ வான் பயிர்களும் எல்லை கிழக்கு சரவணமுத்து பெண் வள்ளியம்மாளுக்கும் பங்காளருக்கும் உள்ள காணி, வடக்கு ஒழுங்கை மேற்கு கதிரித்தம்பி வேலும்மயிலுவுக்குடைய காணி, தெற்கு கதிரித்தம்பி கைம்பெண் ஆசைப்பிள்ளையின் காணி. இதில் சொரியலாய் 2/3 பங்கு இது K 147/149ல் பதியப்பட்டிருக்கிறது.

2 மேற்படி கதிரிப்பாய் இறை மளவராயன் கலட்டியும் மறு பிரிவுகளும் பர நில இலா 20குழி 9ம் இதில் வடக்குப் பக்கமாக நிந்தமான பர நில இலா 5ம் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு கந்தர் முத்தையாவின் உரிமைக்காரரின் காணி வடக்கு பொன்னம்பலம் நாகலிக்கத்தின் காணி மேற்கு ஒழுக்கை தெற்கு இராசநாயகம் பெண் வள்ளியம்மாவின் காணி. இது K 150/64 பதியப்பட்டிருக்கிறது.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.
51 4ம் குறுக்குத் தெரு
யாழ்ப்பாணம்
14-5-56

## தஞ்சை வாணன் கோவை
### சொக்கப்ப நாவலர் உரை


பொய்யாமொழிப்புலவர் பாடிய தஞ்சைவாண கோவைக்குப் பேர் பெற்ற பழைய உரையாசிரி குன்றத்தூர் - அஷ்டாவதானி சொக்கப்ப நாவலர் உரை வித்துவான் ந. சுப்பையபிள்ளை அவர்களின் குறிப்புரையுடன் யாழ். சைவபரிபாலனசபையார் வெளியிட்ட முதலாம் பதிப்பினைப் பலர் அறிவர். அதனை, பி னர்க் கிடைத்த ஏட்டுப் பிரதிகொண்டு பரிசோதிப்பித்துத் திருத்தப் பதிப்பாக இப்போது வெளியிட்டிரு கின்றனர். அது தமிழிலக்கண இலக்கியங் கற்போருக்கும், யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்க பால பண்டித பரீட்சை, மதுரைத் தமிழ்ச் சங்கப் பா பண்டித பரீட்சை, சென்னைப் பல்கலைக் கழக வித்துவா பரீட்சை, அண்ணமலைப் பல்கலைக்கழகப் புலவர் பரீட்சை ஆகியவற்றிற்குக் கற்கும் பரீட்சார்த்திகளுக்கும் பெ தும் பயன்படக்கூடியது, நாற்கவிராஜ நம்பியக பொருளுரையில் இக் கோவைச் செய்யுள் முழுவது உதாரணமாகக் காட்டப்பட்டிருத்தலின், அவ் விலக்க ணங் கற்போருக்கும் பெரிதும் பயன்படுவதாகும் என்பது சொல்லாமலே விளங்கும்.

மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளிய திருச் சிற்றம்பலக் கோவைக்கு அடுத்தபடியாக முதன்மை பெற்று அறிஞரால் பாராட்டப்படுவது தஞ்சைவாணன் கோவையே. அதற்குச் சொக்கப்பநாவலர் இயற்றிய உரை அகப்பொருட்டுறைக் கருத்துக்களையும் பிறவற்றையும் தெள்ளிதின் விளக்குந் தன்மைவாய்ந்து, அக்கோவைக்கு ஓர் அணிகலன்போலத் திகழ்வது என்பது அறிஞர்கருத்து. அங்ஙனஞ் சிறந்து விளங்கும் அக்கோவையின் செய்யுட் கருத்து உரைக் கருத்துக்களை மயக்கமற இலகுவாக விளங்கிக் கற்றற்குச் சாதகமாக வித்துவான் அவர்கள் எழுதிய குறிப்புரை பரீட்சார்த்திகளுக்கும் ஏனையோர்க்கும் பெரிதும் பயன்தரத் தக்கது என்பது இதன் முதற்பதிப்பினால் அறியக் கூடிய தொன்றாகும்.

இப் புத்தகம் பெறவிரும்புவோர் எம்மிடத்தும், பிரபல புத்தக வியாபார ஸ்தலங்களிலும் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாகும்.

**விலை ரூபா : 6 - 00.** வியாபாரிகளும், தொகையாக வாங்குவோரும் உரிய கழிவுடன் விலைக்குப் பெறலாம்.

மனேஜர்,
சைவப்பிரகாச யந்திரசாலை,
யாழ்ப்பாணம்.




### வாழ்க்கை வானில்

2ம் பக்கத் தொடர்ச்சி

நாயக மல்ல என்று திரு. L. H. மேத்தானந்தா விளக்கம் கொடுக்கின்றார். அப்படி அளித்தால் அது பழி என்ற வகையில் எண்ணுகின்ற இந்த அரசியல் வாதி போன்றார்களே உலகத்தின் கலகப் போக்குக் காரணரா யிருக்கின்றனர். ஒன்றை ஒழிப்பது சனநாயகமாம். இரண்டும் உய்வதென்றாற் பழியாம்! என்ன மதி விளக்கம்! அதுவும் ஒரு கல்வி நிலைய அதிபர் இவ்வாறு

### விடம் போதாதாம்

தனிச் சிங்களச் சட்டத்திலே விடம்போதாதென்று ஒரு புதுச் சட்ட திட்டத்தைத் திரு மேத்தானந்தா சமர்ப்பித்திருக்கிறாராம்.

விபரீதக் கருத்தை வெளியிட்டால் ஏனையோர் எதைத்தான் சொல்லமாட்டார்கள்? அப்படியானால் இராணுவப் பலம் படைத்த ஆங்கிலேயர்கள் இலங்கையை விட்டகலமாட்டோம்என்று சொன்னால் அது சனநாயகமாகமாட்டாதா?

### கோட்டு விற்பனவு விளம்பரம்

ாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில்
நுணுவில் செல்லப்பா நவரத்தி இவர் காலஞ்சென்ற சிதம்ப பிள்ளை செல்லப்பாவின் ஆஸ்தி ின் மரண சாதன வழக்கு 17 சாவகச்சேரி டிஸ்திறிக் ாட்டு தத்துவகாரன்
வழக்காளி
இல. 970 M
எதிர்
நுணுவில் கிழக்கு தற்காலம் ொழும்பு கொற்ருேட் G 45 ருமுகம் சின்னத்துரை
எதிரி

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டு 70 ம் இலக்க வழக்கில் எனக் க் கிடைத்த கோட்டுக் கட்ட ப்படி பின் குறிக்கப்படுமாத ம் 1956ம் ஆ ஆனி மீ 16-ந் உ லே 10 மணிக்கு அக்காணிக்குள் ன்று என்னுற் பிரசித்த ஏலத் ல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபா1148-46 ரூபா 750 க்கு 26-2-55 தொட கம் 1-11-55 வரைக்கும் 6 வீத ட்டியும் பின்கூடிவரும் தொகை கு 2-11-55 தொடக்கும் இறுக் ும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 195-21ம்.

ஆதனவிடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி ாவகச்சேரிக் கோ வி ற் ப ற் று நுணுவிலிறை ஊனுடையான் மா நிலப்பரப்பு 19 கிணறும் வீடும் பனைகளும் தென்னை மரங் ளும் மாமரங்களும் புளியமரங்க ளும் எல்லை கிழக்கு வாய்க்கால் வடக்கு பஞ்சாட்சரக் குருக்களுக் குரியவாதனம் மேற்கு ருேட்டு, மட்டுவில் தெற்கு ஊரெல்லை) தெற்கு நுணுவில் மருதடிப் பிள் ளையார்கோவிலாதனம். இதடங் களும்.

மு. நா. மார்க்கண்டு
கொம்மிஷனர்
சாவகச்சேரி
18-5-56
M 286 18-5 (து 50)

### கோட்டு விற்பனவு விளம்பரம்

கரம்பன் S. அந்தோனிப்பிள்ளை செல்வராசா
வழக்காளி
இல. MB 267
எதிராக
1 சரவணை சுப்பிரமணியம் பரகிருபசிங்கமும் பெண்
2. ஷை நாகம்மாவும்
எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 267ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1956ஸு ஆனி மீ 15உ வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 2431-60 ம் இதில் ரூபா 1450/-க்கு 25 5-55 தொடக்கம் 14-9-55 வரைக்கும் வருடமொன்றுக்கு100க்கு 10வீதவட்டியையும்அதன்பின் முழுத்தொகைக்கும் 14-9-55 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 189-62.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோயிற்பற்று சரவணை இறை புளியன் தோட்டம் நெற்பரப்பு 12-ம் வீடு கிணறு பனை வடலிகள் தென்னைகள் எல்லை கிழக்கு சின்னத்தம்பி தம்பையா வடக்கு இளையதம்பி கோபால பிள்ளை மேற்கும் தெற்கும் ருேட்டு இதடங்கலும்,

ஆ. ச. கந்தையா
கொம்மிஷனர்
காரைநகர்
3—6—56
M 285 18-5 (து 50)

### கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

சரவணை வயித்தியாம்பிள்ளை சவிரிமுத்து
இல MB 369
வழக்காளி
எதிராக
1 கரம்பன் சரவணமுத்து முத்தையாவும் பெண்
2 ஷை பாக்கியம்
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 369ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைதத கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1956 ஸு ஆனி மீ 21 உ வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிகுள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபா 1281-67ம் இதில் ரூபா 1000 க்கு 21-7-55 தொடககம் 28-9-55 வரைக்கும் வருடமொன்றுக்கு 100க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் 28-9-55 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 179-35

காணி விபரம்

தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று கரம்பன் இறை வட்டுவில் நிலப்பரப்பு மூன்றே காலே அரைக்கால் (3 3/8 ம் வீடும் கிணறும் எல்லை கிழக்கு பிலிப்புப்பிள்ளை தம்பிஐயா வடக்கு ருேட்டு மேற்கு சின்னையா மகள் லீலாவதி தெற்கு சந்தியாப்பிள்ளை தம்பிராசா இதடங்கலும் ஆனுல் குறித்த கிணற்றில் மேற்கெல்லைக் காணிக்குரிய தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் புறநீங்கல்.

ஆ. ச. கந்தையா
கொம்மிஷனர்
காரைநகர்
8 5-56
M 281 18.5 (து 50)


# வீட்டுப் பணியின் மேன்மை விளங்குதல் வேண்டும்

"ஏதோ சமைப்பதும், தைப்பதும், துணி பின்னுவதும் மட்டுமல்ல குடும்பக் கலை. நாம் அறியும் பெளதீகம், இரசாயனம், பயிர் நூல், உள நூல் பற்றிய குறிப்புக்களை எல்லாம்வாழ்க்கையோடு ஒட்டிச்செயலாற்றுவதுதான் குடும்பக்கலை' என்று சென்னை அவினுசிலிங்கம் அறநிலையப் பெண்கள் பள்ளியில் நடைபெறும் குடும்பக்கலைப் பயிற்சி நிலையத் தொடக்க விழாவில் தலைமைவகித்துப் பேசுகையிலேயே திரு. அவினுசிலிங்கம் செட்டியார் கூறினர். அவர்கள் மேலும் குறிப்பிட்டதாவது:-

சத்துள்ள உணவுகளைப் பிள்ளைகளுக்கும் பிறருக்கும் ஊட்டும் திறனும், குழந்தைகளுக்கு நல்ல உடை உடுத்தும் முறையும், குடும்ப உறவும் தூய்மை துப்புரவும் குடும்பத்தை அழகுள்ளதாக மாற்றுவதோடு உயர்வானதாகவும் செல்வம் சிறப்பதாகவும் மாற்ற வல்லன. குடும்பத்தைத் திறம்பட நிருவகிக்கப் பயிற்றுவிக்கப்படும் இத்தகையப் பயிற்சி பிறநாடுகளை விட இந்திய நாட்டுக்குத்தான் பெரிதும் இன்றியமையாததாகும். நம்நாட்டுப் பெண்களில் பெரும்பாலோர் திருமணம் செய்து கொண்டு வீட்டரசிகளாக விருக்கின்றனரே தவிர மிகச் சிலரே தொழில் துறையில் ஈடுபடுகின்றனர்.

இதுவரையில் கல்லூரிகளோ பல்கலைக் கழகங்களோ பெண்களுக்குத் தேவைப்படும் அத்தகைய பயிற்சியை அளிக்கவில்லை. பெண்களும் அவர்கள் சகோதரர்களைப் போலவே கல்லூரிகளில் அதே கல்வித்துறையிலும் பயிற்சி பெற வேண்டும் என்பதால் அவர்கள் வாழ்க்கைக்கு உறுதுணையாய் நிற்கும் துணைவர்களாக மாருமல் பொருத்த மற்றவர்களாகவும் எட்டமுடியாத அளவுக்கு உயர்ந்தவர்களாகவும் மாறிவிடுகின்றனர்.

அவர்கள் பெளதிகத்தையும் இரசாயனத்தையும் நன்கு படித்திருக்கிருர்கள்: உண்ண உணவைச் சமைப்பதுபற்றியும், பரிமாறுவது பற்றியும் அவர்கள் ஒரு சிறிதே அறிந்துள்ளனர்.. நன்ருக ஆங்கிலம் அறிந்த அவர்கள் நம்நாட்டுக் கலை, பண்பாடு பற்றி மிகச் சிறிதே தெரிந்திருக்கின்றனர். கணக்கியலில் நல்ல புலமைபெற்றுள்ள அவர்கள் ஆடை அணிவதுபற்றியும் அதைப் பாதுகாப்பது பற்றியும் அறிந்தது குறைவானதாகும். இங்கிலாந்து வரலாற்றையும் உலக சரித்திரத்தையும் தெளிவாகத் தெரிந்த அவர்கள் தங்கள் தங்கள் பிள்ளைகளை வளர்க்கத் தெரியா திருக்கிருர்கள். தொழில் துறையில் ஈடுபட விருபபும் பெண்டிரும் குடும்பக் கலையை அறியவேண்டுமென்று எனக்கும் ஆர்வம் இப்போது பெருகி வருகிறது.

பெண்கள் இத்தகைய பயிற்சி பெற்ருல் எதிர் காலத்தில் நல்வாழ்வுக்கு அப்பயிற்சிப் பெரிதும துணைசெய்யும் நம் பெண்களுக்குப்பெரிதும்தேவைப்படும் அறிவு நலங்களை இத்தகைய குடும்பக் கலைப் பயிற்சி உடனடியாகத் தரும்.

(தமிழ்நாடு)

—0—

### இராணுவத்துக்கு எச்சரிக்கை

உண்ணுவிரதம் அதுவும் இராணுவத்திலா என்று பிரதமர் பண்டாரநாயக எள்ளிநகையாடினுர் பத்திரிகை நிருபர் கூட்டத்தில். எந்தவித எதிர்ப்பையும் தான் வளரவிடமாட்டார் என்றும் இராணுவத்தில் இப்பொழுது தப்பபிப்பிராயத்தால் நடைபெற்ற உண்ணுவிரதத்தைத் தான் மன்னிப்பதாயும் இனிமேல் இந்தவிதமான எண்ணமே இருக்கப்படாதென்றும் கடினமாகக் கண்டித்துப் பிரதமர் பேசினுர்.

—

# இலங்கைவாழ் இந்தியர்களுக்கு மொழிப் பிணக்கில்லையா?

1-ம் பக்கத் தொடர்ச்சி

இலங்கைவாழ் இந்தியர்களின் பிறப்புரிமைப் போராட்டத்திலே அன்று தொட்டு இன்றுவரைக்கும் அயராதுழைத்துவருகின்றவர்கள் ஈழத்துத் தமிழ் பேசும் மக்களே. இந்த இனத்தாருக்குச் சொல்லொணு இன்னலையும் இடுக்கணையும் இழைக்கும் வகையிலே அரசியல் மாற்றத்தைச் சனநாயகச் சால்புகளுக்கு முழு மாருகக் கொண்டுவரும் ஒரு அரசாங்கத்தை உண்மையாக எவர்களும் ஆதரிக்க முடியாது. அவ்வகையிலே இந்தியர்களின் நிலை தெளிவாகவே யிருக்கும்.

குடியுரிமை பெறுவதற்கு இலங்கைவாழ் இந்தியர்களுக்கு உதவியாகப் பண்டாரநாயக அரசாங்கம் நல்லெண்ணம் காட்டியிருக்கின்ருர்கள் என்பதற்கு அறிகுறி என்ன? சமசமூக அடிப்படையிலே மக்கள் ஆட்சி நடத்துகின்ருேம் என்று இலங்கைப் பிரதமர் வாய்ப்பறை அறைந்துவிட்டாற் போதுமா? கடைசி இந்தியன் கடல் கடந்து மறையும் வரைக்கும் கண்ணுேடு கண் மூடமாட்டேன் என்று சபதஞ் செய்து சனநாயக வீரராக வெளிவந்திருக்கும் திரு. பண்டாரநாயகாவும் சர்வ சிங்கள புத்த மயத்திலே இலங்கையைப் புதுக்கி அமைக்கத் தீவிர முயற்சி செய்து வரும் தகநாயக சேனநாயக அமைச்சர்களும் இலங்கைவாழ் இந்தியர்களுக்கு விமோசனம் அளிப்பதற்கு உள்ளம் கசிந்து உகந்த வழியிலே இறங்கிவிட்டார்கள் என்று எண்ணுவதற்கு எங்கேயிருக்கின்றது சான்று.

ஒரு மொழியை ஒதுக்கிவிடுவோம். அம்மொழியை அன்னைபோற் போற்றி வரும் அத்தனை மக்களையும் ஆற்ருெணுத் துயர்க் கடலில் ஆழ்ந்த வைப்போம் என்று சொல்லக்கூடிய முறையிலே ஆட்சிபீடத்தில் அமர்ந்து ஆறுதலாக ஆராய்ச்சி செய்ய முன்பே அவசரச்சட்டமாகத் தனிச் சிங்களச் சட்டத்தைப் புகுத்தும் அமைச்சர்கள் சனநாயகத் தலைவர்கள் என்று இலங்கைச் சனநாயக மாநாட்டுத் தலைவர் எள்ளளவும் நினைப்பது இலங்கைக்கே மாருன தொன்ருகும்.

—


## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாளுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியசநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிருப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.


வானமுகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450 ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில, யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 18 5-56 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.